**சிலோன் சிப்பிங் கோர்ப்பரேசன் லிமிட்டட் - 2018**

-----------------------------------------------------------------------------------------

சிலோன் சிப்பிங் கோர்ப்பரேசன் லிமிட்டட்டின் (''கம்பனி'') 2018 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான விரிவான வருமானக்கூற்று, உரிமை மூலதன மாற்றக்கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல்கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2018 மார்ச் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்படடன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென கருதப்படும் மீளாய்வாண்டினது கம்பனியின் செயற்பாடுகள் சம்பந்தமான எனது அவதானிப்புகள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான பணிப்பாளர் சபையின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமானவாறு தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானிப்பது பணிப்பாளர் சபையினது (''சபை'') பொறுப்பாகும்.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவம் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியதும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.4.1 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களால் ஏந்படும் தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 31 இல் உள்ளவாறான கிலோன் சிப்பிங் கோர்ப்பரேசன் லிமிட்டட்டின் நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிசார் செயற்பாடுகள் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப உண்மையானதும் நியாயபூர்வமானதுமான நிலைமையைத் தோற்றுவிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிப்பது மீதான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் (இ.க.நி 01) 32 ஆம் பந்தியின் பிரகாரம், ஏனைய இலங்கை நிதிசார் தேவை நியமங்கள் (எஸ்எல்எப்ஆர்எஸ்) கோரினாலேயன்றி சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் அல்லது வருமானமும் செலவினமும் என்பவற்றை எதிரீடு செய்தலாகாது. எவ்வாறாயினும், அதற்கு முரணாக கம்பனியானது செலவு மீதிகளை வர்த்தக மற்றும் ஏனைய பொறுவனவு மீதிகளுக்கு எதிரே எதிரீடு செய்திருந்தது. இதன் காரணமாக, மொத்த வர்த்தக மற்றும் ஏனைய பெறுவனவுகள் மற்றும் வர்த்தக மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் மீளாய்வாண்டு முடிவிலுள்ளவாறு ரூபா 41,202,849 குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

மேலும் ரூபா 20,057,734 கூட்டுத்தொகையைக் குறிக்கும். பத்து (10) செலவினக் கணக்குகளும் இரண்டு (02) கட்டுப்பாட்டுக் கணக்குகளும் நேரடி செலவினத்திற்கெதிரே எதிரீடு செய்யப்பட்டிருந்தன. இதன் காரணமாக, நேரடிச் செலவினம் அதேயளவு குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 2009 ஆம் ஆண்டில் வங்கிக் கணக்கில் செலவு வைக்கப்பட்ட இனங்காணப்படாத வைப்பாகிய ரூபா 519,517 ஏனைய வருமானமாகக் கருதப்படலாம் என கம்பனி தீர்மானித்திருந்தது. எவ்வாறாயினும், அது மீளாய்வாண்டில் தவறுதலாக காசேட்டில் செலவு வைக்கப்பட்டும் வருமானக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுமிருந்தது. இதன் காரணமாக, 2018 மார்ச் 31 இல் உள்ளவாறான வங்கியில் உள்ள காசும் ஏனைய வருமானமும் ரூபா 1,039,034 குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

(இ) 2018/19 ஆம் ஆண்டிற்குரிய அலுவலக வாடகைச் செலவினமாகிய ரூபா 1,521,240 மீளாய்வாண்டின் செலவினமாக கணிப்பிடப்பட்டிருந்தது. இதனால் அலுவலக வாடகைச் செலவினமும் முடிவுற்ற ஆண்டினது நட்டமும் அதேயளவு அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன.

(ஈ) முன்னைய ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் மீதான நடப்பாண்டினதும் முன்னைய ஆண்டினதும் தவறற்ற வரி இழப்பையும் மூலதனப்படியையும் கருத்திற் கொள்ளாது கம்பனியானது தடுத்து வைத்த வரிச் சொத்தைக் கணிப்பிட்டிருந்தது. இதன் காரணமாக, 2018 மார்ச் 31 இல் உள்ளவாறான தடுத்து வைத்த வரிச் சொத்துக்களும் மீளாய்வாண்டிற்கான நிதியேற்பாடும் ரூபா 2,299,463 குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

## 1.5 ஏனைய சட்டபூர்வ மற்றும் ஒழுங்கமைப்புத் தேவைகள் தொடர்பான அறிக்கை

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் பிரகாரம் என்னால் பின்வரும் விடயங்கள் தெரிவிக்கப்படுகின்றன.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படை மற்றும் கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் வரையறைக்குட்படுதல் என்பன மேற்கூறியவாறு அமையும்.

(ஆ) கணக்காய்விற்குத் தேவையான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டேன் என்றும், எனது பரிசீலனைகளின் மூலம் கம்பனியானது முறையான கணக்கீட்டு அறிக்கைகளைப் பேணியுள்ளதாகக் தோற்றுவதுடன்

கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 151 ஆம் பிரிவில் காணப்படும் தேவைகளுக்கு அமைவாக உள்ளதென்பதும் எனது அபிப்பிராயமாகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1.1 கணக்காய்விற்கான சான்றின்மை

விரிவான வருமானக் கூற்று மற்றும் நிதி நிலைமைக்கூற்று என்பவற்றில் காணப்படும் பின்வரும் கணக்கீட்டு மீதிகளுக்கு ஒத்ததாகக் குறிப்பிடப்பட்ட சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

| விபரம் | தொகை | கிடைக்கப்பெறாத சான்று |
|---|---|---|
| | ரூபா | |
| கடன்பட்டோர் | 1,633,083,504 | மீதிகளின் உறுதிப்படுத்தல் |
| வங்கிகளில் உள்ள காசு | 5,796,901 | வங்கிக்கூற்றுக்கள்/ வங்கிக் கணக்கிணக்கம் மற்றும் மீதிகளின் உறுதிப்படுத்தல் |
| நிலையான வைப்புகள் மீதான வட்டி வருமானம் | 3,133,979 | சரியானதும் பூரணமானதும் என்பதை நிர்ணயிப்பதற்கான ஆவணச் சான்று |

### 2.1.2 பெற வேண்டிய கணக்குகள்

2018 மார்ச் 31 இல் உள்ளவாறு நிலுவையாக இருந்த மொத்த வர்த்தகக் கடன்பட்டோரது தொகை ரூபா 1,799,146,392 ஆகும். மீளாய்வாண்டு முடிவில் 26 சதவீதத்துக்கு நிகரான ரூபா 468,252,254 அந்த மீதிகளுக்கு நலிவுக்கான நிதியேற்பாடாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. கடன்பட்டோரது காலப் பகுப்பாய்வின் பிரகாரம், சில மீதிகள் 37 ஆண்டுகளுக்கு மேலாக அறவிடப்படாது இருப்பனவாகும். எவ்வாறாயினும், அம்மீதிகளை அறவிடுவதற்கு கம்பனி முறையான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கவில்லை. நிலுவையாகவுள்ள மீதிகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) உறுதி செய்யப்படுவதன் பொருட்டு ரூபா 1,702,486,196 கூட்டுத்தொகையுடைய 32 கடன்பட்டோர் மீதிகள் தெரிவுச் செவ்வைக்குள்ளாகின. எவ்வாறாயினும், ஒரு கடன்பட்டோர் மாத்திரமே தனது மீதி ரூபா 41,235,150 என்பதை உறுதிசெய்திருந்தார். எனினும் கணக்கின் பிரகாரம் இம் மீதிகள் ரூபா 69,402,692 ஆகும். ஆகவே, நிலுவையாக உள்ள கடன்பட்டோர் மீதி சரியானவை என்றும் அவை நிகழ்வில் உள்ளனவா என்றும் கணக்காய்வில் நிர்ணயிக்க முடியாதிருந்தது.

(ii) கம்பனியால் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு பண்டங்கள் மற்றும் சேவைகள் வரி மற்றும் தேசிய பாதுகாப்பு வரி என ரூபா 21.54 மில்லியன் கூட்டுத் தொகை அதிகளவில் செலுத்தப்பட்டு 18 ஆண்டுகளாக அவை நியதிச்சட்டப் பெறுவனவாகக் காட்டப்பட்டுள்ளது. நிதிக்கூற்றுக்களில் காணப்படும் இவற்றை அறவிடுவதற்கோ அல்லது தீர்வு செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தது.

**2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காத பின்வரும் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (i) | 2015 மே 25 ஆந் திகதிய பீஈடீ1/2015 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தி | மீளாய்வாண்டின்போது சுற்றறிக்கைக்கு முரணாக கம்பனியின் தலைவர் மற்றும் நிறைவேற்றுப் பணிப்பாளர் அடங்கலாக 13 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 649,142 கூட்டுத் தொகை எரிபொருள் படியாக வழங்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு தரத்திலுமான உத்தியோகத்தருக்கென நிர்ணயிக்கப்பட்ட மாதாந்த எரிபொருள் வரம்பிலும் கூடியதாக இது அமைந்திருந்தது. |
| (ii) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்கச் சுற்றறிக்கை | நிதியாண்டு ஆரம்பமாவதற்கு 3 மாதங்களுக்கு முன்னரே வரவுசெலவுத் திட்டத்தின் வரைவுஅங்கீகாரத்திற்காகப் பணிப்பாளர் சபைக்கு வழங்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட வரவு, செலவுத்திட்டத்தின் பிரதிகள், வரிசை அமைச்சு, பொது முயற்சிகள் திணைக்களம், பொதுத் திறைசேரி, கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அடுத்துவரும் ஆண்டு ஆரம்பமாவதற்கு 15 நாட்களுக்குள் அனுப்பப்பட வேண்டும். எவ்வாறாயினும், 2017/18 ஆம் நிதியாண்டிற்கான வரவு செலவுத்திட்டத்திற்குரிய சபையின் அங்கீகாரம் 2017 செப்டெம்பர் 08 இல் வழங்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் பிரதிகள் குறித்த தினத்திலிருந்து 07 மாதங்களுக்குப் பிறகு 2017 ஒக்டோபர் 25 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. |
| (iii) | 2015 யூன் 17 ஆந் திகதிய பீஈடீ 3/2015 ஆம் இலக்கச் சுற்றறிக்கை | கம்பனியின் தலைவருக்கும் நிறைவேற்று பணிப்பாளருக்கும் உரித்துடைய மாதாந்தப் படிகள் முறையே ரூபா 80,000 மற்றும் ரூபா 65,000 என்பனவாகும். எவ்வாறாயினும், அதற்கு முரணாக, தலைவருக்கும் நிறைவேற்று பணிப்பாளருக்கும் குறித்த அங்கீகாரமின்றி முறையே ரூபா 85,000 ரூபா 75,000 என மாதாந்தப்படி வழங்கப்பட்டிருந்தது. 2019 மே மாதத்தில் கம்பனி இவ்விடயத்தைத் திருத்தம் செய்தபோதும், கூடுதலாக வழங்கப்பட்ட தொகை அறவிடப்படவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிப்பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 மார்ச் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான கம்பனியின் நட்டம் ரூபா 175,556,501 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான நட்டம் ரூபா 237,010,652 ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 25.9 சதவீதமான ரூபா 61,454,151 அதிகரிப்பைச் சுட்டிக்காட்டுகின்றது. நிதிசார் செலவினத்தில் ஏற்பட்ட 8 சதவீத குறைவான ரூபா 92,455,327 இவ்வதிகரிப்புக்கான முக்கிய காரணியாகும்.

### 3.2 பகுப்பாய்வுடனான நிதிசார் மீளாய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான கம்பனியின் மொத்த வருமானம் ரூபா 41,538,925 ஆல் அல்லது 1.6 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. சொந்தக் கம்பனிகள் மூலம் உருவாகிய கப்பற் தள வருமானத்தில் ஏற்பட்ட குறைவே இதற்கான முக்கிய காரணியாகும். மேலும், மீளாய்வாண்டிற்கான கம்பனியின் நேரடிச் செயற்பாட்டுச் செலவினம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 4 சதவீதமான ரூபா 65,195,470 அதிகரிப்புக்குள்ளாகியிருந்தது.

(ii) மீளாய்வாண்டினது கம்பனியின் கப்பல் கடன் மீதான வட்டிச் செலவினம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 17.6 சதவீதமான ரூபா 115,158,560 அதிகரிப்புக்குள்ளாகியிருந்தது. மீளாய்வாண்டிற்கான தேறிய நட்டத்திற்கு இது நேரடிக் காரணியாக அமைந்தது.

### 3.3 விகிதங்களின் பகுப்பாய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மொத்த இலாப வரம்பு 37 சதவீதத்திலிருந்து 33 சதவீதமாகக் குறைவடைந்திருந்தது. வருமானத்தில் குறைவும் நேரடிச் செயற்பாட்டுச் செலவினத்தில் அதிகரிப்பும் இதற்குப் பிரதான காரணமாக அமைந்தன.

(ii) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது வட்டியை ஈடு செய்யும் விகிதம் 0.57 சுற்றிலிருந்து 0.67 சுற்றாக சிறிதளவு அதிகரித்திருந்தது. வட்டிச் செலவினத்தை ஈடுசெய்யக்கூடிய போதியளவு இலாபம் கம்பனியிடத்து இல்லாதிருந்ததை இது காட்டுகின்றது.

(iii) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் கம்பனியின் இயக்க விகிதம் மீளாய்வாண்டில் 110 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. குறுகிய கால மற்றும் நெடுங்கால பணக் கைமாற்றும் அதிகரிப்பின் அதிகளவு உயர்வை இது காட்டுகின்றது.

(iv) மீளாய்வாடின்போது பயன்படுத்திய மூலதனத்தின் மூலம் கம்பனியால் பெறப்பட்டது. (ஆர்ஏசீஈ) குறைந்த வீதமான 5 சதவீதமே ஆகும்.

(v) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் கடன்பட்டோரிடமிருந்து அறவீடு மேற்கொள்ளப்படும் காலப்பகுதி 184 நாட்களிலிருந்து 231 நாட்களாக அதிகரித்திருந்தது. கம்பனியின் நலிவான கடன் முகாமைத்துவத்தை இது காட்டுகின்றது.

(vi) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நடைமுறை விகிதம் 0.91 சுற்றிலிருந்து 1.05 சுற்றாக அதிகரித்திருந்தது. கம்பனியின் குறைவான திரவவியல் நிலைமையை இது காட்டுகின்றது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

2017/18 நிதியாண்டில் ஆரம்பிக்கும் ஐந்தாண்டு கூட்டிணைந்த திட்டம் மற்றும் 2017 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டம் என்பவற்றிற்கமைய, பின்வரும் 06 செயற்திட்டங்களை கம்பனி ஆரம்பிப்பதற்குத் திட்டமிட்டிருந்தது. எவ்வாறாயினும் திட்டமிடப்பட்டவாறு கம்பனியால் இலக்கினை எய்த முடியவில்லை. அச் செயற்திட்டங்கள் மீதான தலைவரின் கருத்துரை பின்வருமாறு

| | நடவடிக்கை | தலைவரின் கருத்துரை |
|---|---|---|
| (i) | கைவிடப்பட்ட பொதிகளை விடுவித்தலும் சுங்கப்பிணைப்புடனான களஞ்சிய அறைகளது நிர்மாண வேலையும் | கொடுப்பனவுகள் தீர்வு செய்யப்படாததால் செயற்திட்டத்திற்கென ஒதுக்கப்பட்ட காணி நகர அபிவிருத்தி அதிகாரசபையால் இரத்துச் செய்யப்பட்டு செயற்திட்டம் கைவிடப்பட்டது. |
| (ii) | எம்சிஆர்டபிள்யு டக் செயற்பாடுகளை மேற்கொள்ளுதல் | தற்போதுள்ள ஒப்பந்தத்தை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் முடிவுக்குக் கொண்டுவராமையால் கம்பனியால் எம்ஈஆர்டபிள்யூ டக் தொழில்நுட்ப முகாமைத்துவத்தை மேற்கொள்ள முடியவில்லை. |
| (iii) | தானாக இயங்கும் வள்ளங்களை (எஸ்பீபீ) சுவீகரித்துக் செயற்படுத்துதல் | செயற்திட்டத்தை ஆய்வு செய்வதற்கு நியமிக்கப்பட்ட குழுவின் கருத்துரைப்படி இச் செயற்பாடு சாத்தியமற்றது ஆகும். |
| (iv) | கரையோர கப்பல் சேவையை உருவாக்குதல் | இனங்காணப்பட்ட கரையோரப் பாதையில் புகையிரத வீதி தொடர்புச் சாதனங்கள் ஏற்படும் வரை செயற்திட்டம் சாத்தியமாகாது. |
| (v) | இலங்கை கொடிப் பதிபகத்தை மேம்படுத்தல் (வசதிக்கான கொடி) | சில அங்கீகாரத்தின் பின்னர் செயற்திட்டம் அமுலாக்கப்படலாம். |
| (vi) | மிதக்கும் களஞ்சிய வசதிகளை வழங்குதல் | களஞ்சிய செயற்பாட்டிற்கான அனுமதிப்பத்திரம் இதுவரை வழங்கப்படவில்லை. |

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் மீதான குறைபாடுகள் அவ்வப்போது தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் மீது விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | முறைமை மற்றும் கட்டுப்பாட்டு அம்சம் | | அவதானிப்பு |
|---|---|---|---|
| (i) | கணக்கீடு | (i) | நிதிசார் தகவல்கள் மீதான பிழையற்றதும் பூரணத்துவம் வாய்ந்ததுமான தன்மை சந்தேகத்துக்கிடமாக இருப்பது |
| | | (ii) | இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை |
| | | (iii) | நாட்குறிப்புப் பதிவுகளிலும் பேரேட்டுப் பதிவுகளும் குறைபாடுகள் |
| (ii) | தொழில்நுட்பத் தகவல் முறைமை | (i) | தகவல் முறைமையின் பராமரிப்பு நடவடிக்கைகள் மற்றும் கட்டுப்பாடு செயற்படுத்தப்படாமை |
| | | (ii) | கம்பனியின் தேவைகளுடன் இணங்காமை |
| (iii) | கடன் கொடுத்தோரும் கடன்பட்டோரும் | (i) | அறவீடுகளிலும் திர்வுகளிலும் தாமதம் |